சுருக்கம்

கோயம்புத்தூர் மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண்.219 நாள்:28.9.2010

C3 (19970) 4855/10

படிக்கப்பட்டன:

(1) கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் கடிதம் ந.க.எண்.11533/2007/எம்.எச்.5, நாள் 15.9.2010

(2) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.44569/2010/எம்.3, நாள் 21.9.2010.

---

ஆணை:-

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் முதலாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், மாநகராட்சி விரிவாக்கம் தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் தொகை அடர்த்தி, தனி நபர் வருமானம், சதுர கிலோ மீட்டருக்கான வருவாய் மற்றும் பிரதான விவசாயிகளின் சதவிகிதம் ஆகிய குறியீடுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதாகவும், குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம், ஆகிய மூன்று நகராட்சிகள், சரவணம்பட்டி, காளப்பட்டி, வெள்ளலூர், வடவள்ளி, துடியலூர், வீரகேரளம், மற்றும் பேரூர் ஆகிய ஏழு பேரூராட்சிகள், விளாங்குறிச்சி மற்றும் சின்னியம்பாளையம் ஆகிய இரண்டு ஊராட்சிகள் ஆக மொத்தம் 12 உள்ளாட்சிகள், ஏனைய உள்ளாட்சிகளை விட, மக்கள் தொகை அடர்த்தி, தனி நபர் வருமானம் மற்றும் சதுர கிலோ மீட்டருக்கான வருவாய் ஆகியவை அதிகமாக கொண்டுள்ளதாகவும், பிரதான விவசாயத் தொழில்புரிவோர்களின் சதவிகிதம் குறைவாக இருப்பதாலும், மேற்படி உள்ளாட்சி அமைப்புகள் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்படலாமென, மாநகராட்சி மன்றம், தீர்மானம் (எண். 94 நாள் 26.8.2010) நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட 12 உள்ளாட்சி அமைப்புகள் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைய ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர், சின்னவேடம்பட்டி மற்றும் வெள்ளக்கிணறு ஆகிய இரண்டு பேரூராட்சிகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பாக, இவ்விரு பேரூராட்சிகளும் மாநகராட்சியுடன் இணைக்கப்படுமளவிற்கு நகரப் பகுதிகளாக முழுமையாக வளர்ச்சி அடையாததாலும், பொதுமக்கள் நலன், மாநகராட்சியின் திறம்பட்ட நிர்வாகம் ஆகியவற்றை கருத்திற்கொண்டும், அவற்றை, உத்தேச விரிவாக்கத்தில் சேர்க்க வேண்டியதில்லை எனவும், அடுத்தக்கட்ட விரிவாக்கப்பணியின் போது ஆய்வு செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர், மாநகராட்சியுடன், 12 உள்ளாட்சி அமைப்புகளை மட்டும் இணைக்கலாம் எனவும், சின்னவேடம்பட்டி மற்றும் வெள்ளக்கிணறு ஆகிய பேரூராட்சிகள் நகரப் பகுதிகளாக வளர்ச்சி அடையவில்லை எனவும் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், மாநகராட்சி மன்றத் தீர்மானம், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரையின் அடிப்பட்டையிலும், நகர்மயமாக்கலுக்கான குறியீடுகளின் அடிப்படையிலும், மேற்படி 12 உள்ளாட்சி அமைப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. அரசு, இச்செயற்குறிப்பினை கவனமாக பரிசீலனை செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, கீழ்க்காணும் 12 உள்ளாட்சி அமைப்புகள் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்படலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எண். | உள்ளாட்சி அமைப்பு | மக்கள் தொகை 2001 | பரப்பளவு (ச.கி.மீ) |
|---|---|---|---|
| | கோயம்புத்தூர் மாநகராட்சி (தற்போதைய) | 930882 | 105.60 |
| | இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகள் | | |
| 1 | குறிச்சி நகராட்சி | 77153 | 20.30 |
| 2 | குனியமுத்தூர் நகராட்சி | 58900 | 23.54 |
| 3 | கவுண்டம்பாளையம் நகராட்சி | 48276 | 10.05 |
| 4 | சரவணம்பட்டி பேரூராட்சி | 17643 | 11.75 |
| 5 | காளப்பட்டி பேரூராட்சி | 22034 | 25.26 |
| 6 | வெள்ளலூர் பேரூராட்சி | 17340 | 16.64 |
| 7 | வடவள்ளி பேரூராட்சி | 24779 | 12.84 |
| 8 | துடியலூர் பேரூராட்சி | 21004 | 8.69 |
| 9 | வீரகேரளம் பேரூராட்சி | 19993 | 5.80 |
| 10 | பேரூர் பேரூராட்சி | 7965 | 6.40 |
| 11 | சின்னியம்பாளையம் ஊராட்சி | 6329 | 9.27 |
| 12 | விளாங்குறிச்சி ஊராட்சி | 9124 | 9.22 |
| | மொத்தம் | 1262122 | 265.36 |

6. இவ்வாணை வெளியிடப்படுவதால் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் தற்போதைய பதவிக் காலம் பாதிக்கப்படாது. மேலும், 1981–ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3–ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 1981–ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (4) ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய வரைவு அறிவிக்கையினை அரசுக்கு, உடன் அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். அச்சட்டத்தின் பிரிவு 3 (6) ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய அறிவிக்கையினைத் தொடர்ந்து, சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு, விரிவுப்படுத்தப்படவுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் குறித்த அறிக்கையை அனுப்ப வேண்டுமென நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இவ்வறிக்கையின் அடிப்படையில் வார்டுகள் நிர்ணயம் செய்யப்பட்டு விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 2011–ஆம் ஆண்டு சாதாரணத் தேர்தல் நடத்தப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை– 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர்.
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள். (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள். (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள். (ஊ.வ (ம) ஊ. து. இயக்குநர் வழியாக)
<u>நகல்:–</u> மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.2, ந.நி.5, பேரூ.2, அ.ந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/10

பிரிவு அலுவலர்